மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசு ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட பின் வேலை தொடங்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த எஸ்டிமேட்டிற்காக போடப்பட்டுள்ள தொகை எவ்வளவு? இந்த வேலை இன்னும் எத்தனை மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். இந்தப் பழனி தொகுதி, பாப்பம்பட்டி ஏரியாவில் இன்றைக்கு தண்ணீர் ஒரு குடத்திற்கு எட்டணா வீதம் வாங்கப் படுகிறது. அப்படியும் சில சமயங்களில் கிடைக்கவில்லை. சீக்கிரமாக தண்ணீர் கிடைக்கவேண்டுமென்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், பெர்குலேஷன் வாட்டர் கிணறுகளுக்குக் கிடைக்கும். எனவே தயவுசெய்து விரைவிலே ஆரம்பிக்க வேண்டும். இதற்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த பச்சையாற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு ரூ. 1,120 இலட்சம் ஆகும் என்ற குறிப்பைக் கொடுத் திருக்கிறார்கள். அந்தக் குறிப்பு அரசினுடைய கவனத்தில் இருக் கிறது. நிதியாதாரத்தைப் பொறுத்து வேலைகள் எடுக்கப்படும்.

உசிலம்பட்டி வட்டத்தில் அசுவமா நதித் திட்டம்

230—(*வினா எண் 8696) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தாலுகாவில் நடைபெற்று வந்த அசுவமா நதித் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அசுவமா நதித் திட்டம் முதல் நிலை ஆய்வில் (Preliminary Investigation) உள்ளது.

1987 மார்ச் 28]

(முற்பகல் 11-00)

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அசுவமா நதித் திட்டம் கடந்த சில ஆண்டு களாகவே ஆய்வில் இருந்துகொண்டு இருக்கிறது என்ற பதிலை நாங்கள் பெற்றுக்கொண்டு இருக்கிறோம். உள்ளபடியே இன்றைக்கு வைகையைப் பொறுத்தமட்டில் பாசனத்திற்கு என்று பல்வேறு வகைகளில் கால்வாய்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற நேரத்தில், அந்த வைகை அணையினுடைய தண்ணீர் விவசாயத்திற்கு மட்டும்தான் பயன்படப்போகிறதா என்ற கேள்வி எழுந்து, அது குடிதண்ணீர் அணையாக மாறக்கூடிய அளவிலே அந்த அணை இருக்கக்கூடிய காலகட்டம் இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுமாதிரி காலகட்டத்திலே இன்றைக்கு இந்த அசுவமா நதித் திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலமாகத்தான் வறண்ட பகுதியாக இருக்கின்ற உசிலம்பட்டி தாலுக்காவிலே கிடைக்கக்கூடிய தண்ணீரைத் தேக்கிவைத்து அணையைக் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, கூடிய விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அசுவமா நதித் திட்டம் குண்டார் படுகையில் அமைய இருக்கிறது. அந்த தற்போது கேஜிங்ஸ் செய்துகொண்டிருக்கிறோம். அது நீண்ட கால ஆய்விலே இருந்ததால் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமா என்று பார்க்க வேண்டிய காலகட்டம் இருக்கிறது. உறுப் பினருடைய உணர்வைப் புரிந்துகொண்டு, மிக வேகமாக ஆய்வுகளை முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]